செ.வெ.எண்: நாள்:13.03.2019

**நாமக்கல் மாவட்டம்**

**வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

----------------

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு வசதிகள் செய்து வருகிறது. 18 வயது தகுதியான வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் இலவச தொடர்பு எண் 1950 ஐ தொடர்பு கொண்டு வாக்காளர்கள், வாக்காளராக பதிவு செய்ய தேவையான தகவல்கள், எந்த பகுதியில் மற்றும் எந்த வாக்குசாவடிகளில் தாங்கள் வாக்களிக்க வேண்டும் என்ற விவரத்தை தங்களது பெயரையும், தந்தை பெயரையும் தெரிவிப்பதன் மூலமே அறிந்துக்கொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதே விவரங்களை Voter Help Line என்ற ஸ்மார்ட் போன் செயலியை கொண்டு எளிதில் தெரிந்துகொள்ளும் வசதியும் தேர்தல் ஆணையம் செய்து தந்துள்ளது. மேலும் வாக்காளர்கள் அலுவலகங்களுக்கு செல்லாமலேயே, வரிசையில் நிற்காமலேயே தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே கணினி அல்லது கைப்பேசி உதவியுடன் www.nvsp.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்யவும், தனது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை தெரிந்துகொள்ளவும் தேவையான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர்களுக்கான மேற்கண்ட சேவைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அனைத்து வாக்காளர்களும் தேர்தல் நாளன்று வாக்களிக்கவும், பல்வேறு விழிப்புணர்வுகளை மனித சங்கிலி, கலை நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள் மூலமாக ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் பொதுமக்களை கவரும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன வசதிகளுடன் கூடிய மின்னணுதிரை வாகனத்தின் மூலமாக இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் விழிப்புணர்வு குறும்படம் ஒளிபரப்பப்பட்டு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இன்று (13.3.2019) நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு மனித சங்கிலியில் சுரபி பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உட்பட 250-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் சார் ஆட்சியர் திரு.சு.கிராந்தி குமார் பதி இ.ஆ.ப, அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மகளிர் திட்ட இயக்குநர் டாக்டர்.மணி, ரெட்கிராஸ் ஒருங்கிணைப்பாளர் திரு.இராஜேஸ்கண்ணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், சுரபி பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.